2019 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அவ்வளவுதானே? இன்னும் இருக்கிறதா. (குறுக்கீடு) கேளுங்கள். இரண்டாவது கேள்வி, கேளுங்கள்.*

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

வினாக்கள்—விடைகள் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது துறை சார்ந்த கேள்விகளை எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் இந்த அவையில் கேள்வி நேரத்தைக் குறைத்துக்கொள்ளலாமா அல்லது கேள்விகளைக் குறைத்துக்கொள்ளலாமா என்று கேட்டதற்கு, தாங்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், "கேள்வி நேரம்தான் மிக முக்கியம். அரசாங்கத்திடமிருந்து பல செய்திகளை உறுப்பினர்கள் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடியது கேள்வி நேரம்" என்று சொன்னீர்கள். அந்தக் கருத்து முழுவதும் நியாயமானது; நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒவ்வொரு துறையைப் பற்றியும் தங்கள் தொகுதிக்குட்பட்ட அல்லது மாநிலம் முழுவதற்குமான கேள்விகளைக் கேட்பதற்கு மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. காங்கிரஸ் period—லும், அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும், அதற்குப்பிறகு வந்த கலைஞர் அவர்கள் காலத்திலும், மாண்புமிகு முதலமைச்சராக எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்திலும், ஏன் அம்மையார் அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலும், இந்த அவையில் கேள்வி நேரத்தில் போலீஸ் இலாகா, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித்துறை ஆகிய 3 இலாகாக்கள் சார்ந்த கேள்விகள் இருந்தே தீரும். நீங்கள் வேண்டுமானால் எடுத்துப் பாருங்கள்.*

நீங்களே இருந்திருக்கிறீர்கள்; நீங்களே பார்த்திருக்கிறீர்கள். இந்த மூன்று துறைகளும் மிகப் பெரிய துறைகள்; போலீஸ் இலாகாவில் உறுப்பினர்கள் கேள்வி கேட்பதற்கு நிறைய இருக்கின்றன. பொதுப் பணித் துறையிலும், நெடுஞ்சாலைத் துறையிலும் அவரவர் தொகுதி சம்பந்தமாகக் கேட்பதற்கு கேள்விகள் நிறைய உண்டு. ஆனால், நீண்ட நெடுங்காலமாக இந்த 3 துறைகளிலிருந்தும் கேள்விகள் வருவதில்லை. இதற்கு பதில் சொல்ல வேண்டியவர் நீங்கள்தான். தாங்கள்தான் இதற்கு பொறுப்பு; மாண்புமிகு அவை முன்னவரும் பொறுப்பு. நீங்கள் இருவரும்தான் பதில் சொல்ல வேண்டும். காரணம், நம்முடைய முதல்வர் அவர்கள் பதில் சொல்ல முடியாதவர் அல்ல. அவர் பேசுகிற பேச்சை நான் கேட்டு அசந்து போய்விட்டேன். அடேங்கப்பா; அப்படிப் பேசுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) கழுத்திலே ஒன்றை மாட்டிக்கொண்டு, தேர்தல் பிரச்சாரத்தில் பிய்த்து எடுக்கிறார்; பாருங்கள். (சிரிப்பு) அப்பேர்ப்பட்டவரால் இரண்டு கேள்விகளுக்கா பதில் சொல்ல முடியாது? (குறுக்கீடுகள்) எனக்கென்ன தோன்றுகிறது என்றால், he is capable; he can give reply. ஆனால், நீங்கள் கேள்விகளைப் போட்டு, அவர்களிடமிருந்து பதிலை வாங்குவதற்குக் கஷ்டப்படுகிறீர்கள் என்று நினைக்கிறேன். இதற்கு charge உங்கள்மீதுதான் போடுவேன். இந்த மூன்று துறைகளும் மிகப் பெரிய துறைகள். ஆகையால், நாளை முதலாவது இந்த மூன்று துறைகளிலிருந்தும் கேள்விகள் வருமா? இந்த மூன்று துறைகளிலும் கேள்விகள் போடுவதையே மறந்துவிட்டார்களா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

இன்னொரு supplementary question. நான் அமர்ந்திருக்கும் வரிசையில் கடைசியில் உள்ள இருக்கைகளில் யாரையாவது உட்கார்ந்து பார்க்கச் சொல்லுங்கள். அங்கு அமர்ந்திருக்கும் உறுப்பினர்களுக்கு காற்று வராமல் மூச்சு திணறக்கூடிய நிலை இருக்கிறது. அதையும் சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சரி செய்து தரப்படும். அடுத்து சிறப்புக் கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: தற்போது இந்த அவையில் அவை முன்னவர் அவர்களும் இருக்கிறார்கள்; மாண்புமிகு முதலமைச்சர்

2019 ஜூலை 3] [திரு. துரைமுருகன்]

அவர்களும் இருக்கிறார்கள்; தாங்களும் இருக்கிறீர்கள். நான் எழுப்பிய கேள்விக்கு ஒரு பதிலைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து என்னவென்று பார்க்கிறேன்.*

திரு. துரைமுருகன்: *இது எங்கள் உரிமை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் குறிப்பிட்டதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கின்ற அனைத்துத் துறைகளிலும் நீங்கள் எந்தக் கேள்வி கேட்டாலும், அவர் உடனடியாக அதற்கு பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இனிமேல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு வகிக்கின்ற எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறைகளிலிருந்தும் கேள்விகளை எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையினை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், முக்கியமானது என்னவென்று சொல்லுங்கள்?*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள் மேகதாது அணை கட்டப்படும் என்றும், அவர் ஆட்சிக்கு வந்தால் காவேரி மேலாண்மை வாரியம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைப்பற்றியெல்லாம் அன்றைக்கே நீங்கள் பதில் சொல்லியிருக்க வேண்டும். இதைப்பற்றியெல்லாம்* zero hour–ல் raise *செய்யக்கூடாது; உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வாறெல்லாம்* raise *செய்ய முடியாது. உட்காருங்கள்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டிருந்தனர்.)